# பத்திரிக்கை செய்தி

## மின் இணைப்பு வழங்க லஞ்சம் பெற்ற வழக்கில் அப்போதைய மின் பாதை ஆய்வாளருக்கு 2 ஆண்டுகள் மெய்க்காவல் சிறை

புகார்தாரர் திரு.இளமாறன், கடலூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தன்னுடைய சகோதரர் கட்டிய வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டி உதவி மின் பொறியாளர் அலுவலகம், புதுப்பாளையம், கடலூர் மாவட்டத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணபத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.முனுசாமி, மின்பாதை ஆய்வாளர், உதவி மின் பொறியாளர் அலுவலகம், கடலூர் மாவட்டம் என்பவர் தனக்கு ரூ. 1,000/- லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, கடலூர் பிரிவில் புகார் அளித்தார். இப்புகாரின் அடிப்படையில் பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 2013ம் வருடம் மேற்கொள்ளப்பட்டு திரு.முனுசாமி, மின்பாதை ஆய்வாளர் புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணம் ரூ.1,000/- பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையால் கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது கடலூர் முதன்மை குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் இன்று 17.04.2025 அன்று திரு.முனுசாமி, மின்பாதை ஆய்வாளருக்கு 2 ஆண்டுகள் மெய்க்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.10,000/- அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.